# பிரிவு 6 - 20 வயதிற்கு மேல்

பாடல் : 1

தலம் : திருமாற்பேறு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : வியாழக்குறிஞ்சி தாளம்: ஆதி

குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவ னாணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. 1.114.1

பாடலின் பொருள்:

குருந்த மரத்தின் அடியில் குருவாக அமர்ந்தவனும் தனக்கு மேல் ஒருவன் இல்லாத பெரியவனாயும் பெண் ஆண் வடிவோடு விளங்குபவனாயும் குளத்தில் பூக்கும் கருநீல மலர் போன்ற கண்களை உடைய உமையம்மையால் போற்றப்படுபவனாயும் இருப்பவன் சிவபெருமான். உயிர்களின் நோய்களை நீக்கும் அரிய மருந்து ஆகிய சிவபெருமானது வளநகர் திருமாற்பேறு என்பதாகும்.

பாடல்: 2

தலம் : திருத்தேவூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : காந்தாரம் தாளம்: ஆதி

பாடு வாரிசை பல்பொருட் பயனுகந் தன்பால்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றித்
தேடு வார்பொரு ளானவன் செறிபொழிற் றேவூர்
ஆடு வானடி யடைந்தன மல்லலொன் றிலமே. 2.82.5

பாடலின் பொருள்:

திருமுறைகளை ஓதுவாரும் உலகப்பொருளின் பயனாக சிவபெருமானை அறிதலே என்று அறிந்து அன்போடு கூடுவாரும் உலக உறவுகளின் மேல் செலுத்தும் பற்றுக்களை விட்டுச் சிவபெருமானையே பற்றிக் கொண்டாரும் சிவனையே தேடுவாரும் செறிந்த பொழில்களை உடைய தேவூரில் நடனம் புரிபவனுமாகிய சிவபிரான் திருவடிகளை அடைவர். அடைந்தார்க்கு எவ்வகை துன்பமும் இல்லை.

பாடல் 3

தலம்: திருப்பூவனூர் திருநாவுக்கரசு நாயனார் அருளியது

திருக்குறுந்தொகை தாளம் : ஆதி

பூவ னூர்ப்புனி தன்திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே. 5.65.1

பாடலின் பொருள்:

பூவனூரில் எழுந்தருளியுள்ள இறைவன் திருநாமத்தைத் தம் நாவில் நூறுநூறாயிரம் கூறிப் பரவியவர் தம் பாவங்கள் சிதைந்து கெடும்.இவ்அடியார் தேவர் தலைவனாகிய இந்திரனைவிட மிகப் பெருஞ் செல்வர்கள் ஆவர் .

பாடல் : 4

தலம் : திருஎறும்பியூர் திருநாவுக்கரசு நாயனார் அருளியது

திருத்தாண்டகம்

பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே. 6.91.1

பாடலின் பொருள்:

எண்ணாயும் திருத்தம்பெற்ற கலைகளாயும் நிற்கும் தன்னையும் தன் கூறுபாடுகளையும் அறிதற்குரிய அறிவற்ற எனக்கு அவற்றைக் காட்டினவனும் அறிந்த நான் அவனை அடைந்த பின் தாய் தந்தையரைப் போல அன்பாய்த் தொடர்ந்து ஆளாகக் கொண்டவனுமாகிய சிவபெருமான் அழகிய எறும்பியூர் மலைமேல் மன்னும் மாணிக்கமும் செழுஞ்சுடருமாய் இருக்கின்றான். அப்பெருமானை நான் சென்று அடையப்பெற்றேன் .

பாடல் : 5

தலம்: திருநொடித்தான்மலை நம்பி ஆரூரர் அருளியது
பண் :பஞ்சமம் தாளம் : ரூபகம்

தானெனை முன்படைத்தான் அத
றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி
னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த
யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்
தான்மலை உத்தமனே. 7.100.1

பாடலின் பொருள்:

திருக்கயிலை மலைக்கண் வீற்றிருந்தருளும் முதல்வன், தானே முன்பு என்னை நிலவுலகில் தோற்றுவித் தருளினான் ; தோற்றுவித்த அத்திருக்குறிப்பினையுணர்ந்து அவனது பொன்போலும் திருவடிகளைப் போற்றிப் பாடல்கள் புனையாது போனேன்! அக்குற்றத்தைப் பொருட்படுத்தாமல் என்னை அடியவர்களுள் ஒருவனாக வைத்தெண்ணி, வானவர்களும் வந்து எதிர்கொள்ளுமாறு, பெரியதோர் யானை யூர்தியை எனக்கு அளித்து, எனது உடலொடு உயிரை உயர்வுபெறச் செய்தான். அவனது திருவருள் சிறப்பை எவ்வாறு போற்றுவேன்!

பாடல் : 6

திருவாசகம் – திருஆனந்தமாலை திருவாதவூரடிகள் அருளியது
இராகம் :மோகனம்

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ. 8.50.5

பாடலின் பொருள்

தாயாகிப் பாலூட்டும் பெருமானே! பால் தாராவிடின் நாயேன் சவலையாய்ப் போய்விடுவேன். இனியாயினும் அருள் செய்வாய். தாயே என்று உன் திருவடியை அடைந்தேன். நீ என்னிடத்து அருள் நிறைந்தவனாகி இருக்க வில்லையோ?. நாயினேனது அடிமைத் திறம் வேண்டி என்னை ஆட்கொண்டாய். அடிமை கொண்டபின் அடியேனை வேண்டாம் என்று கைவிடலாமோ!

சிவசிவ

பாடல் : 7

திருத்தொண்டர்புராணம் சேக்கிழார் அருளியது

இராகம் : மத்தியமாவதி

மற்றுநீ வன்மை பேசி
   வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற்
   பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே யாகும்
   ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார்
   தூமறை பாடும் வாயார் 12.5.216

பாடலின் பொருள்:

தூய்மையான மறைகளை முன்பு அருளிச் செய்த சிவபெருமான், “ நீ என்னுடன் வன்மையான சொற்களைச் சொல்லி வழக்கிட்டமையால், `வன்றொண்டன்` என்னும் பெயரைப் பெற்றாய். நமக்கும் அன்பினால் செய்யும் திருமுழுக்காட் டுதல் திருமாலை அணிவித்தல், திருவிளக்கிடுதல் முதலாய வழிபாடுகளினும் மேலான வழிபாடாவது போற்றியுரைக்கும் புகழுரைகளேயாகும். ஆதலின் இந்நிலவுலகில் நம்மைத் தமிழ்ச் சொற்களால் ஆகிய பாடல்களைப் பாடுக என்றருளிச் செய்தார்.

திருச்சிற்றம்பலம்

சிவசிவ

போட்டிக்கான திருமுறைப் பாடல்களை ஓதியவர் திருமுதுகுன்றம் ஓதுவாமூர்த்தி சண்முக திருவரங்க யயாதி அவர்கள்.